**வத்தளை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 செப்டெம்பர் 16 ஆந் திகதியன்றும் அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வத்தளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குகேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான கையிருப்பு நேரடி, சரி, பிழை பார்த்தல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 6,765,400 பெறுமதியான பொதுக் களஞ்சியக் கையிருப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,218,352 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 452,952 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | கையிருப்பினது நேரடி சரி, பிழை பார்த்தல் பெறுமதி கணக்கில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கு ரூபா 8,226,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பிழையற்ற பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | இதற்கு முன்னர் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கெப் வண்டிகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சித் திணைக்களம் வழங்கிய அறிவுறுத்துரைப்படி இவ்வாறு கணக்கிலிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆறு கடன் கொடுத்தோர்களது தொகை ரூபா 392,151 கூடுதலாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | பிழையற்ற பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | வத்தளை மற்றும் நீர்கொழும்பு நீதிமன்றங்களது தீர்ப்புகளின் பிரகாரம் சபையின் ஊழியர் ஒருவருக்கு ரூபா 164,254 சேவை இழப்பீடு (சேமலாப நிதியம்) வழங்கப்பட வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டபோதும், அக் கொடுப்பனவுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொறுப்பினை குறிப்பொன்றின் மூலம் நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். | வழக்குகள் தொடர்பாகப் பணியாற்றும் பெண் உத்தியோகத்தராகிய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பெண் உத்தியோகத்தராகிய மற்றுமொரு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு இவ்வழக்கின் பொருட்டு எதிர்காலப் பொறுப்புக்கான நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு இயலாது போனது எனக் குறிப்பிடுகிறோம். |
| (உ) | மூன்று கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகைக்கும் அவற்றுடன் தொடர்புடைய பட்டோலை மீதிகளுக்குமிடையே ரூபா 8,273,239 வேறுபாடு நிலவியது. | குறித்த மீதிகளது வேறுபாட்டை இணக்கம் செய்து கணக்கைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | அம்மீதிகளைக் குறுகிய காலத்தில் திருத்தம் செய்வது வசதியற்றது. அவை ஒத்து வராமைக்கான காரணத்தை இனங் கண்டதன் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 பெற வேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 974,800 மற்றும் 1-3 ஆண்டுகள் வரையிலான ரூபா 1,257,282 என்பன உள்ளடங்கியிருந்தன. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம். |
| (ஆ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் | கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தீர்வு | எதிர்காலத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 155,144,953 ஆகும். இதில் 3-5 ஆண்டுகள் வரையிலான ரூபா 64,774 மீதி, 1-3 ஆண்டுகள் வரையிலான ரூபா 2,901,962 மீதி மற்றும் ஓராண்டிற்குக் குறைவான ரூபா 152,178,217 மீதி என்பன உள்ளடங்கியிருந்தன. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (இ) | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தொழில்கள் நிமித்தம் பெற வேண்டிய ரூபா 420,833 தொகையானது 2019 மே 24 ஆந் திகதியளவிலும் பெறப்படவில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5 இணங்காமை

#### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| | 219 ஆம் பிரிவு | பிரதேச சபையின் எந்தவொரு அங்கத்தவர், ஊழியர் ஆகியோா பிரதேச சபையுடன் எவ்வித உடன்படிக்கையிலும் நேரடியாகவோ அல்லது பிற வழிகளிலோ ஈடுபடலாகாது எவ்வாறாயினும், சபை அங்கத்தவர் ஒருவரது மனைவிக்கு விழா மண்டபம் ஒன்று குத்தகைக்கு | சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருந்ததுடன் 2009 மே 30 முதல் ரூபா 974,800 குத்தகை வாடகை நிலுவையாகவும் இருந்தது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த ரூபா 2,385,615 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினததிலும் கூடிய வருவாய் ரூபா 93,428,047 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 78,739,806 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதியத்தினால் பிரதேச மக்கள் அதிகூடிய நலன்களைப் பெறக்கூடியவாறான திட்டத்துடன் செலவுகளை மேற்கொள்வது சபையின் நோக்கமாயினும், சபைக்குரிய ரூபா 64.16 மில்லியன் 20 நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியானது பிரதேச மக்களது சுபீட்சத்திற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை நிதி நெருக்கடிக்குள்ளாகும் போது அதனால் விளையக் கூடிய ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்கே இத்தொகை வைப்பிலிடப்பட்டிருந்தது. |

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாய்க்கான தோற்றுவாய் | 2018 மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 78,650,700 | 87,885,932 | 95,446,728 | 58,992,564 | 76,075,000 | 81,917,156 | 65,391,546 | 66,553,360 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,700,000 | 2,160,330 | 2,160,330 | - | 2,450,000 | 2,756,085 | 2,756,085 | - |
| (iii) | வாடகை | 4,000,250 | 4,508,171 | 4,981,498 | 6,072,119 | 5,372,100 | 4,714.085 | 3,790,633 | 6,545,445 |
| (iv) | ஏனைய வருவாய் | 148,821,550 | 183,357,043 | 183,357,043 | - | 140,986,800 | 134,672,205 | 134,672,205 | - |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டின் ஆரம்பத்திலான ரூபா 66,553,360 நிலுவையில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டது மிகவும் குறைந்த 11.4 சதவீதமே. | வருவாய் நிலுவையை அறவிடுவது வினைத்திறனுடன் நடைபெற வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது நிலவை அறவீட்டு நடவடிக்கைகளுக்கு சொத்துத் தடை விதிக்கும் உத்தியோகத்தர்களது சேவையைப் பெற முடியவில்லை. அதன் காரணமாக, நிலுவையை அறவிடுவதிலான முன்னேற்றம் குறைந்துள்ளது. |
| (ஆ) 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 58.99 மில்லியன தீர்வை நிலுவை மீதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8.6 மில்லியன், 5-10 ஆண்டுகள் வரையிலான ரூபா 11.67 மில்லியன், 3-5 ஆண்டுகள் வரையிலான ரூபா 7.22 மில்லியன், 1-3 ஆண்டுகள் வரையிலான ரூபா 18.77 மில்லியன் ஓராண்டிற்குக் குறைந்த ரூபா 12.69 மில்லியன் என நிலுவைகள் நிலவின. | வருவாய் நிலுவையை அறவிடுவது வினைத்திறனுடன் நடைபெற வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹெந்தலை உப அலுவலகத்திற்குச் சொந்தமான கெரவலபிட்டியவில் உள்ள 24 கடைகளிலிருந்து ரூபா 6,037,068 கடை வாடகையானது 2012 முதல் 2018 வரை அறவிடப்படாதிருந்தது. அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடை வாடகை நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.4 ஏனைய வருவாய்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் 174 பிரசார விளம்பரங்களுக்கு ரூபா 573,310 வருவாயாகப் பெறப்பட்டிருந்த போதும், 2015 டிசெம்பர் 28 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் உள்ளடங்கிய உப விதிகளுக்கமைய விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்படவில்லை. | தேவையான உப விதிகளை ஆக்கி அவற்றை கடைபிடிக்க வேண்டும். | உப விதிகளின் பிரகாரம் விண்ணப்பப் படிவங்களைத் தயாரிப்பதற்கு மற்றும் விளம்பரப் பலகைகள் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளுமாறு வருவாய்ப் பரிசோதகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (ஆ) | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 28 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு ரூபா 489,801 தீர்வையாக மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. வியாபார வரி அறவிடப்படவில்லை. | வியாபார வரி அறவிடப்பட வேண்டும். | 2020 தொடக்கம் வியாபார வரியை அறவிடுமாறு வருவாய்ப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெற வேண்டிய 150 நிறுவனங்கள் இருந்த போதும், 21 நிறுவனங்களே அவற்றைப் பெற்றிருந்தன. அவ்வாறு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிராத நிறுவனங்களுக்கு வர்த்தக அனுமதிப்பத்திரம் 2018 | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் பெற வேண்டிய நிறுவனங்கள் எல்லாவற்றிற்கும் வர்த்தமானி ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்கள் அறவிடப்பட வேண்டும். | இனங் காணப்பட்ட நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பாவணைச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தலும் நிர்வகித்தலும், மக்களது சுக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபை நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 14 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு உப விதிகளை ஆக்க வேண்டுமாயினும், 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 07 பணிகளுக்கான உப விதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | தேவையான உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். | எஞ்சிய 07 உப விதிகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |

**(ஆ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தைப் பெறாமை (Out Put)**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நூலகத்தை தன்னிச்சையாக இயக்குவதற்கென 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 06 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும், கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் கூறு விலைகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டமையால் எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைய முடியவில்லை. | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைய வேண்டும். | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைய முடியாது போயினும், கூறுவிலைகள் கோரப்பட்டு தற்போது குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**(இ) எதிர்பார்த்த நலன்களைப் பெறாமை (Out come)**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஹெந்தலை உப அலுவலகத்திற்குச் சொந்தமான 04 கடைகள் 2007 ஆம் ஆண்டு முதலாகவும், 01 கடை 2013 முதலாகவும், 02 கடைகள் 2016 முதலாகவும், 01 கடை 2017 முதலாகவும் எதிர்பார்த்த நலன்களைப் பெறாதிருந்தன. | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைய வேண்டும். | இக் கடைகள் சபையின் உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. |
| (ii) | ஹெந்தலை கோகானக இடத்தில் அமைந்துள்ள ரூபா 2,316,697 பெறுமதியான 02 றூட், 11 பர்ச்சஸ் காணியில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 20 இலட்சம் செலவில் கட்டிடம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அக் கட்டிடத்தின் மூலமோ காணியின் மூலமோ நலனெதுவும் பெறப்படவில்லை. | எதிர்பார்த்த நலன்களைப் பெற வேண்டும். | இவ்விடத்தில் பஸ் தரிப்பிடத்தை அமைப்பதற்கான கட்டிடம் சபையின் நிதியைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டது. சில பஸ் சாரதிகள் இங்கு வருகை தராது எலகந்தை சந்தியில் தமது பஸ் வண்டிகளை நிறுத்துகின்றனர். |

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தமானியின் 18(1) பிரகாரம் வருடாந்த வரவு, செலவுத்திட்டத்தில் வீட்டுக்கு வீடு கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கான செலவை ஈடு செய்வதற்குக் கட்டணம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் கழிவுப் பொருள் வரியோ | கழிவுப் பொருட்களுக்கான வரி அல்லது கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும். | 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் கழிவுப் பொருட்களுக்கான வரியை அறவிடுதல் பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2020 முதல் இது ஆரம்பிக்கப்படும். |

அல்லது கட்டணமோ நிர்ணயிக்கப்படவில்லை. சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகள் தொடர்பான கண்காணிப்புக் குழுவும் நியமிக்கப்படவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும், 2013 தொடக்கம் நூலகர் பதவியும், 03 வருவாய் பரிசோதகர்களுக்கான பதவிகளும், ஒரு முன்பள்ளி ஆசிரியருக்கான பதவியும் வெற்றிடங்களான இருந்தன. | ஊழியர்களது வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | இப் பதவி வெற்றிடங்கள் சகல காலாண்டு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2014 டிசெம்பர் 19 அந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் ஆரம்ப சேவைத்தரத்திலான 12 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் 35 வேலைக்களத் தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், குறித்த சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட வேண்டும். | சகல காலாண்டு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனினும், இதுவரை அங்கீககரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படவில்லை. |
| (இ) | அரசாங்க சேவை சேமலாப நிதிய அடிப்படையில் பதவி நியமனம் பெற்ற 09 சுகாதாரத் தொழிலாளர்களும் 02 வேலைக்களத் தொழிலாளர்களும் நியமனத்திற்கான நிரந்தரப் பதவியில் அல்லாது சபையின் டிறக்டர் மற்றும் லொறிகளது சாரதிகளாகப் பணியாற்றினர். | நிரந்தரப் பதவிக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | சாரதி அனுமதிப் பத்திரங்களையுடைய தொழிலாளர்கள் குறித்த வாகனங்களது சாரதிகளாகத் தற்காலிகமாகப் பணியாற்றுகின்றனர். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 34 ஊழியர்கள் 804 நாட்கள் சம்பளமற்ற லீவைப் பெற்றிருந்தனர். 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | சம்பளமற்ற லீவு குறைத்துக் கொள்ளப்பட வேண்டும். | குறித்த ஊழியர்களது அடுத்து வரும் மாதச் சம்பளத்தில் கழிவுகள் மேற்கொள்ளப்படும். |

அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 467,231 ஆகும்.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமியின்மை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **தீர்வை / சொத்து மதிப்பீடு என்பன காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படாமை.** | | |
| | சபைக்குரிய மூன்று உப அலுவலகங்களிலும் சொத்துக்களுக்கான தீர்வை மதிப்பீடு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் பின்னர் 10 ஆண்டுகள் கழித்திருந்தமையால், தற்போதைய பெறுமதிக்கேற்ப சொத்துக்களை மீளாய்வு செய்வது தவறியிருந்தது. இதனால் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 62,129 கூறுகளுக்குரிய சொத்துக்களிலிருந்து அறவிடப்படக் கூடிய நாளது வரையாக்கப்பட்ட வரி அறவிடப்படாதிருந்தது. | சொத்துக்களது தீர்வை தாமதமின்றி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் விலை மதிப்புத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | **காணி விற்பனை மீதான வரி** | | |
| | ஹெந்தலை உப அலுவலகத்திற்குரிய 04 காணிகள் விற்பனை செய்யப்பட்டதால் பெறப்பட்ட 1 சதவீத வரி ரூபா 1,781,115 ஆகும். அதனை காணி விற்பனைப் பெறுமதியாக சபையின் உத்தியோகத்தர் ஒருவர் மதிப்பீடு செய்திருந்தார். | விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டு, காணி விற்பனையின் போது விற்பனைப் பெறுமதியின் 1 சதவீத வரியை அறிவிடுவதற்கு வருவாய் பரிசோதகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு சபையிடம் 146 காணிகள் இருந்தன. அக்காணிகளுள் 71 காணிகளுக்கு உரித்துரிதியும் 51 காணிகளுக்கு நில அளவைப் பத்திரங்களும் இல்லாதிருந்தன. | சகல காணிகளுக்கும் உரித்துறுதிகளும் நில அளவைப் பத்திரங்களும் தயாரிக்கப்பட வேண்டும். | முப்பத்து நான்கு காணிகளுக்கான நில அளவைப் பத்திரங்களைத் தயாரிப்பதற்கான அங்கீகாரம் பெறப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நடவடிக்கை முடிவடைந்தும் அக்காணிகளுக்கு பிரகடன உரித்துறுதி உறுதி தயாரிக்கப்படும். |

#### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 24,361,461 பெறுமதியான குறூ கெப் ஒன்று, பெக்கோ லோடர் ஒன்று, கலீ பவுசர் ஒன்று என்பவற்றிற்கான உரித்து சுவீகரிக்கப்படவில்லை. | சொத்துக்களைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட இவ்வாகனம் 2019 ஆம் ஆண்டின் போது சபையால் சுவீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 06 வாகனங்கள் அழிவடைந்த / பயன்படுத்த முடியாத நிலையில் ஹெந்தலை மற்றும் வெலிசற வாகனப் பிரிவுகளில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. | பழுதுபார்க்கப்பட்டு அல்லது கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டும். | அழிவடைந்த / பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள இவ் வாகனங்களுக்கு பொறியியல் அறிக்கை பெறப்படுவதையடுத்து பழுதுபார்த்தல் பயனற்றதெனின் கைதவிர்ப்புச் செய்யப்படும். |

### 3.4.4. சொத்துக்களை பிறர் வசமாக்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வத்தளை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 188,000 பெறுமதிகளை 11 ஏக்கர், 02 றூட், 11 பர்ச்சஸ், விசாலமான உஸ்வெடகெய்யாவ பாரிஸ்வத்த காணி தலைவராலும் செயலாளராலும் 1991 ஆம் ஆண்டில் 57 காணித் துண்டுகளாக்கப்பட்டு பரிசு உறுதி மூலம் பிறர் வசமாக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மூலம் பெறக்கூடிய வருவாயைப் பெற வேண்டும். | தகவல்களை அறிந்து கொள்வதற்குத் தேவையான ஆவணங்களும் நபர்களும் தற்போது இல்லை. |

### 3.5 பொருட் கொள்வனவு

### 3.5.1 பொருட் கொள்வனவுத் திட்டம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பொருட் கொள்வனவு முகவர் நிலையச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்க 4.2.1 (அ) மற்றும் (இ) என்பவற்றின் பிரகாரம் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமும் வருடாந்த விரிவான திட்டமும் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| எதிர்பார்த்த அழுத்தச் சக்தி தொடர்பான ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்படாது 30 கொங்ரீட் வீதி நிர்மாண வேலைகளுக்கு ரூபா 19,217,736 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விஞ்ஞானபூர்வமாக நியமத்தை உறுதி செய்ய வேண்டும். | செயற்திட்டங்களுள் 03 முடிவடையாதுள்ளன. அவற்றுள் 02 முடிவடையும் நிலையில் உள்ளன. எஞ்சிய செயற்திட்டம் எதிர்காலத்தில் நிறைவு பெறும். |